பொருளாதாரத்திலே மிகவும் பின்தங்கியிருக்கும் மக்கள் வாழும் இடம். அதை நகராட்சியாக மாற்றினால் மக்களுக்கு அதிக வரி விதிக்க வேண்டி வரும். எனவே, அது தொடர்ந்து பேரூராட்சியாகவே இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அதனுடைய வருமானம் மூன்று இலட்சத்திற்கு மேல் அதிகரித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதை நகராட்சியாக ஆக்கக்கூடாது என்று பேரூராட்சியின் தலைவர் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இதுபற்றி விரிவாக அனுப்புமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 87 முதல் 89 வரையில் அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, ஒரு சிறு வேண்டுகோள். இரண்டாவது பெரிய எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் மன வருத்தத்திலே போய்விட்டார்கள். அவர்கள் இருந்திருந்தால் துணைக்கேள்விகள் போடுவார்கள். வரச்சொல்லி நீங்கள் ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் வந்து விட்டார்கள்.

வேடர் சமூகத்தினர்

* வினா எண். 90 — திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் உள்ள வேடர் சமூகத்தினரை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என் கிட்டப்பா: தலைவரவர்களே, பிற்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் உள்ள வேடர் சமூகத்தினரை தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் சேர்த்திட மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள்

1979 பிப்ரவரி 19]

அறிவித்தார்கள். இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பல்லாண்டுக் காலமாகத் தங்களுடைய சமூக நிலை முன்னேற வேண்டுமென்ற அடிப்படையில் தங்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, நமது புதிய அரசு இனிமேலாவது மத்திய அரசாங்கத்திற்கு அவர்களைத் தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் சேர்க்குமாறு வேண்டுகோள் விடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றால் அவர்கள் தீண்டத்தகாதவர்களாக இருக்க வேண்டும். இந்த அடிப்படையில்தான் மத்திய அரசாங்கம் சில வரைமுறைகளை வகுத்துத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே, இந்த விதிமுறைக்கு உட்படாத காரணத்தால் இவர்களைச் சேர்க்க இயலவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த வேடர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவகையிலே தாழ்த்தப் பட்டவர்கள் மாதிரியாகவும், தீண்டப்படாதவர்கள் மாதிரியும் கருதப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் மாநிலம் முழுவதும் சுருக்கமாகத்தான், பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இவர்களை இந்த தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று இந்த அரசாங்கம் வற்புறுத்தி மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, வேடர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சாதிக் கொடுமைக்கு ஆளானதாக இந்த அரசுக்குத் தகவல் இல்லை. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கத்திற்கு இதற்கு முன்பு சில வகுப்பினரை தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் சேர்க்க எழுதியும் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கிறது.

திரு. போ. கோபாலன்: தலைவரவர்களே, வேறு ஏதாவது பிற பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைத் தாழ்த்தப் பட்ட சமுதாயமாக அறிவிக்க மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த அரசு அப்படி எதுவும் செய்யவில்லை.

திரு. எம், அண்ணாமலை : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள், பின்தங்கியவர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 26 வயது, 31 வயது என்ற வயது வரம்பு, வேலை கொடுப்பதற்கா அல்லது வயது வரம்பு வைத்து வேலையில்லை என்பதற்கா என்று அமைச்சரவர்கள் அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரமாகச் சொல்கிறேன்.

திரு. து. இராமசாமி : தலைவரவர்களே, கோவை மாவட்டத்திலே பவானி தாலுக்காவிலே குமாரபாளையம் என்ற பகுதியிலே லம்பாடி சாதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஏழைகள் இருக்கிறார்கள். அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களைத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, கேள்வி வேடர் சமூகத்தினரைப் பற்றியது, லம்பாடிகளைப் பற்றியது அல்ல.

அருந்ததியார்களுக்குச் சலுகைகள்

* வினா எண் 91—திரு. ஓ. சோ. வேலுச்சாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரிசனங்களில் அருந்ததியார் அல்லது சக்கிலியர் என்ற பிரிவினர் தாழ்த்தப்பட்ட மக்களுக்குள் மிகவும் தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் சலுகைகள் வழங்குவதில் இவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க அரசு செயற் குறிப்பு வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இல்லை.

[முற்பகல் 9-30]

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களில் அருந்ததியார்களுக்கு முன்னுரிமை கொடுப்பது அவசியம், ஏனெனில், அவர்கள் மிகவும் சிறுபான்மையினராக இருக்கிறார்கள். அதிலும் தாழ்த்தப்பட்ட மக்களிலேயே இந்த அருந்ததியார்கள் தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கிறார்கள். ஆகவே அரசு மறுபரிசீலனை செய்து அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.